

# ஊற்று



## தலைவர் உரை :

## பாராட்டி வாழ்த்துகிறோம்

நமது பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தின் பணிகள், சிறப்புக்கள் இனி கிழமைதோறும் தொலைக்காட்சி வழியாக உலகத் தமிழர்கள் அனைவரையும் சென்றடையும் இனிப்பான செய்தியை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நாம் ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி திருமணமேடை நேர்காணல் நிகழ்ச்சி பதிவு செய்யப்பட்டு **'இமயம்'** தொலைக்காட்சியில் ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8.30 மணி முதல் 9.00 மணி வரை ஒளிப்பரப்பாகிறது. முதல் ஒளிபரப்பு கடந்த 4-7-2015 அன்று ஒளிபரப்பப்பட்டது. சங்கத் தலைவர் வரவேற்புரை, சான்றோர் பெருமக்கள் குத்துவிக்கேற்றி நிகழ்ச்சியைத் துவக்குவது, அவர்களுக்குச் சிறப்பு செய்வது அத்துடன் பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தின் சிறப்பான பணிகள் குறித்து தமிழர்களுக்கு நன்கு அறிமுகமான சான்றோர்களின் அறிமுக உரை என்று நிகழ்ச்சி நடைபெறுகிறது. முதல் வாரம் **நீதியின் குரல்** பத்திரிக்கையின் நிறுவனத் தலைவர் திரு. சி.ஆர்.ஐ. பாஸ்கரன் அவர்கள் இந்தியாவிலேயே மிகச் சிறப்பாகச் செயல்படும் தமிழ்ச் சங்கமாகப் பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் விளங்குகிறது. உலகத் தமிழர்களை எல்லாம் ஒன்றிணைக்கும் வகையில் செயல்படும் பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தை வாழ்த்துகிறேன் என்று மகிழ்ச்சியோடு குறிப்பிட்டார். இரண்டாவது வாரம் 12-7-2015 அன்று பிஜேபி கட்சியைச் சேர்ந்த திரு. நாராயணன் அவர்களும், திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் **திரு. ஜாக்குவார் தங்கம்** அவர்களும் சங்கத்தைப் பாராட்டி வாழ்த்தினார். இதேபோல் ஒவ்வொரு வாரமும் நிகழ்ச்சி ஒளி பரப்பப்பட்டு உலகத் தமிழர்கள் அனைவரும் நமது பணியை அறியும்படி செய்வோம். இதற்காக அரும்பாடுபட்ட நமது துணைச்செயலாளர் இராமசுப்பிரமணியன் அவர்களை நெஞ்சார பாராட்டுகிறோம்.

பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பெயரில் நடத்திவரும் உயர்நிலைப்பள்ளியில், காமராசர் பிறந்தநாள் விழா 22-7-2015 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாணவர்களுக்கு வழக்கம்போல் நன்கொடையாளர்கள் இலவயமாக அனைத்தும் வழங்கினர். திரு. **எம்.எஸ். பழனிசாமி** அவர்கள் புத்தகப் பையும், திரு. **பாலசுந்தரம்** அவர்கள் மாணவர்கள் சீருடைக்காக ரூபாய் 50 ஆயிரமும், இந்து நாடார் சங்கத்தின் சார்பில் மாணவர்கள் அனைவருக்கும், திரு. **பி.எஸ்.சுரேஷ்குமார்** மற்றும் **பாலசுந்தரம்** அவர்கள், சங்க நிர்வாகிகள் நோட்டுப் புத்தகங்களும் வழங்கினர். அதேபோல் சங்கச் செயற்குழு உறுப்பினர் திரு. **சுந்தரவேலு** அவர்கள் மாணவர்களுக்கு காலணிக்காக ரூபாய் 20 ஆயிரமும், நோட்டுப் புத்தகங்களும் வழங்கினர். விழா சிறப்பாக நடைபெற்றது.

நவி மும்பாய் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் இலக்கிய விழா 14-7-2015 அன்று நடைபெறுவதாகவும், விழாவில் தமிழ்நாடு கல்வி அமைச்சர் மாண்புமிகு வீரமணி

அவர்கள் கலந்து கொள்வதாகவும், தமிழ்நாட்டிற்கு வெளியில் செயல்படும் தமிழ்ச் சங்கங்கள் தங்கள் செயல்பாடுகள் குறித்தும், தேவை குறித்தும் தமிழ்நாடு அரசிடம் அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பது குறித்தும் விரிவான அறிக்கை ஒன்றைத் தரும்படி அமைச்சர் கூறியதாக நவி மும்பாய் தமிழ்ச் சங்கத்தின் தலைவர், திரு. மகாதேவன் அவர்கள் விழா நடைபெறும் 4 நாட்களுக்கு முன்பு நம்மைத் தொடர்பு கொண்டு கூறினார். இவ்வளவு குறுகிய காலத்தில் நம்மால் நேரில் சென்று கலந்து கொள்ள முடியாது என்பதால் நமது சங்க முன்னாள் தலைவரும், அனைந்திந்திய தமிழ்ச்சங்கப் பேரவையின் செயல் தலைவரும் ஆன திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களோடு கலந்து பேசி அமைச்சரிடம் நாம் சேர்க்க வேண்டிய அறிக்கையில் இடம் பெற வேண்டிய செய்திகள் குறித்தும் விவாதித்து அவரது துணையுடன் விரிவான வேண்டுகோள் அறிக்கை நமக்காக மட்டும் அல்லாமல் தமிழ்நாட்டிற்கு வெளியில் செயல்படும் தமிழ் அமைப்புகள் அனைத்திற்கும் தமிழ்நாடு அரசு செய்ய வேண்டியது என்ன? என்பது குறித்து நவி மும்பாய் தமிழ்ச் சங்கத்திற்கு அனுப்பி விழாவில் நம் சார்பில் அறிக்கை படித்து அமைச்சரிடம் சேர்ப்பிக்கும்படி கேட்டுக் கொண்டோம்.

## மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்கு..

கருநாடகத் தமிழரும் பெங்களூர்த் தமிழ்ச் சங்கமும். கடந்த 65 ஆண்டுகளாகக் கருநாடக மாநிலத்தின் தலைநகர் பெங்களூருவில் இயங்கிவரும் பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் பல்வேறு சிறப்புகளை உடையது. சங்கம் பெங்களூரு அலசூரு ஏரிக்கரையில் நான்கு மாடிகளைக் கொண்ட கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. தமிழ் மொழி, இலக்கியம், கலை பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றைப் போற்றிப் பாதுகாத்து, அவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் அமைப்பு இது. இதற்காக வாரந்தோறும் இலக்கிய வகுப்புகளும் திங்கள் தோறும் கவியரங்குகளும் கருத்தரங்குகளும் நடத்தப்படுவதுடன் தமிழுக்கும் தமிழ் இனத்துக்கும் பாடுபட்டவர்களின் பெயரால் அமைந்துள்ள அறக்கட்டளைகள் வழிச் சொற்பொழிவுகள் நடத்தப்படுகின்றன. தமிழ் மாணவர்களை ஊக்குவித்திடும் வகையில் பல்வேறு போட்டிகளையும் நடத்தி வருகின்றோம். கருநாடக மாநிலத்தில் தமிழ்க் கல்வி குறைந்துவரும் நிலையில், தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்ட உயர்நிலைப் பள்ளியைப் பெருந்தலைவர் காமராசர் பெயரால் நடத்தி வருகின்றோம். சங்கப் பள்ளி அதற்கென அமைந்துள்ள மூன்று மாடிக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. சங்கம் கன்னடர்களுக்கும் தமிழர்களுக்கும் பாலமாக இயங்கிவரும் அமைப்பாகவும் உள்ளது. கன்னடம் அறியாதவர்களுக்குக் கன்னடமும், தமிழ் அறியாதவர்களுக்குத் தமிழும் கற்பிக்கப்படுகின்றன. தமிழுக்குப் பெருமை சேர்க்கும் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டுப் பாடல்கள் அனைத்தும் கன்னடத்தில் மொழிபெயர்க்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. முதல்முறையாக, திருக்குறள், தமிழ், கன்னடம், ஆங்கிலம் மொழிகளில் சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளது. கனகதாசருடைய பாடல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியும் நடைபெற்று வருகிறது. மக்களுக்குத் தேவையானவற்றை அறிந்து சங்கத்தில் அளிக்கப்பட்டுவரும், யோகா, கராத்தே, நாட்டியம், இசை, திருப்புகழ்,

கைவினை வகுப்புகள் தமிழர்களுக்கு மட்டுமல்லாமல் அனைத்துத் தரப்பினருக்கும் பயனளித்து வருகின்றன. மக்கள் நலம்பெற்று வாழ வேண்டும் என்னும் பரந்த நோக்கில் இலவயக் கண் மருத்துவ முகாம்களும், குருதிக்கொடை முகாம்களும் நடத்தப்படுகின்றன. இலவயமாக ஓமியோபதி, யோக மருத்துவம் அளிக்கப்படுகின்றன. மாற்று மருத்துவ முறைகளில் மருத்துவம் அளிப்போர் சங்கத்தைப் பயன்படுத்தித் தொண்டுசெய்து வருகின்றனர். தமிழர்களின் இல்லற வாழ்வு சிறக்கத் **''திருமண மேடை''**த் துறை இயங்கி வருகின்றது. பல்லாயிரக் கணக்கில் நூல்களைக் கொண்ட நூலகம் உள்ளது. சங்கத்தின் இந்தப் பணிகளால் நாள் தோறும் நூற்றுக் கணக்கில் மக்கள் சங்கத்திற்கு வந்து செல்கின்றனர். இவ்வளவு பணிகளுக்கும் இடையில் கருநாடகத்தில் தமிழர்கள் மொழிச் சிறுபான்மையராக வாழ்ந்தாலும் தமிழர்கள் ஏறத்தாழ ஒரு கோடி அளவிற்கு வாழ்கின்றனர். தலைநகர் பெங்களூருவில் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் தமிழராவார்கள். ஒரு மாநிலத்தில் மொழிச் சிறுபான்மையராக வாழும் மக்களுக்கு இந்திய அரசியல் சட்டம் வழங்கியுள்ள உரிமைகள் இந்த மாநிலத்தில் வாழும் தமிழர்களுக்கும் கிடைத்திட வேண்டும் என்பதால் அதற்காகவும் பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் பாடுபட்டு வருகிறது.. இந்த மாநிலத்தின் வளர்ச்சியில் தமிழர்களின் பங்களிப்பு மகத்தானது. அணைகள், விதான செளதா போன்ற பெரிய பெரிய கட்டிடங்கள், கோலார் தங்கவயல், சாலைகள், கல்வி நிறுவனக்கள், குறு - பெரு தொழில் நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்களில் பணிகள், மருத்துவம், சட்டம், கல்வித் துறைகள், வேளாண் வளர்ச்சி போன்ற பல்வேறு துறைகளில் தமிழர்களின் பங்களிப்பு இல்லாத துறையே இல்லை எனலாம். கன்னட மொழி, இலக்கிய வளர்ச்சியிலும் தமிழர்கள் சிறப்பான பங்காற்றியுள்ளார்கள். இருப்பினும் கருநாடகச் சட்ட மன்றத்தில் உறுப்பினராக ஒரு தமிழர் கூட இல்லை. அவ்வப்போது ஓரிருவர் உறுப்பினராக இருந்திருந்தாலும் இதுவரையில் ஒருவர் கூட அமைச்சரானதில்லை. மாநிலத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கும் மாநிலங்கள் அவைக்கும் தேர்ந்தெடுக்கப்படுபவர்களில் ஒருவர் கூடத் தமிழராய் இருப்பதில்லை. சங்கம் எடுத்த பெரு முயற்சியின் காரணமாக, கடந்த பெங்களூர்ப் பெரு நகர் மன்றத் தேர்தலின்போது, முக்கியமான கட்சிகள் தமிழர்க்கு வாய்ப்பளித்தன. அதன் பயனாக 25 தமிழர்கள் உறுப்பினர்கள் ஆனார்கள். இந்த நிலை அனைத்துத் துறைகளிலும் நிலைபெற வேண்டும் என்பதற்காகச் சங்கம் பாடுபட்டு வருகின்றது. கல்வி, வேலை வாய்ப்பு, தொழில் தொடங்கல் போன்றவற்றில் தமிழர்களுக்கு ஏற்பட்டுவரும் தடைகளை அகற்றிடவும் சங்கம் முயன்று வருகின்றது. அவ்வப்போது தமிழர்களுக்கு எதிர்ப்பு வலுக்கும்போது அதனை முன்கூட்டியே அறிந்து தக்க நடவடிக்கைகளைச் சங்கம் மேற்கொண்டு வருவதால் துயர சம்பவங்கள் தவிர்க்கப்பட்டு வருகின்றன. அதற்காக அரசுடனும் அரசியல் கட்சிகளுடனும் நல்லிணக்கப் போக்கினைச் சங்கம் உருவாக்கி வருகின்றது. பதினெட்டு ஆண்டுகளாக மூடி இருந்த திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்டதும் அந்த விழாவினைக் கருநாடக அரசே முன்னின்று நடத்தியதும் அடித்தளமாக அமைந்தது. ஆண்டு தோறும் சங்கத்தால் நடத்தப்படும் திருவள்ளுவர் விழாவில் முதலமைச்சர் முதல் மற்ற அமைச்சர்களும் சட்ட மன்ற, நாடாளுமன்ற, பெருநகர் மன்ற உறுப்பினர்களும் கட்சி சார்பில்லாமல் அனைத்துக்

கட்சியினரும் கலந்து கொள்வது சங்கத்தின் பணிகளுக்குக் கிடைத்த வெற்றி. திருவள்ளுவர் விழாவிற்குப் பெங்களூரு பெருநகர மன்றம் நிதி உதவி அளித்து வருவது குறிப்பிடத்தக்கது. ஆண்டு தோறும் கன்னட வளர்ச்சி இயக்ககம் திருவள்ளுவர் விழாவிற்குத் தம் சொந்த செலவில் நாட்டுப்புறக் கலைஞர்களை அனுப்பி உதவி வருகின்றது. இருப்பினும் ஆங்காங்கே தமிழர்கள் முன்னேற்றத்திற்குத் தடைகள் உள்ளன என்பதையும் மறுக்க முடியாது. குறிப்பாகக் கல்வித்துறையில் தமிழ்க் கல்வி வாய்ப்புகள் படிப்படியாகக் குறைந்துகொண்டே வருகின்றன. அரசு, பெருநகர் மன்றக் கல்வி நிறுவனங்களில் போதிய தமிழாசிரியர்கள் அமர்த்தப்படுவது இல்லை. அதனால் தமிழ்ப் பிரிவுகள் மூடப்பட்டு வருகின்றன. அதனால் கருநாடகத்தில் தமிழ்க் கல்வி குறைந்துகொண்டே வருகிறது. கருநாடகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் ஒன்றில் கூட, தமிழ் இருக்கை இல்லை. அதனால் தமிழ் மேற்படிப்புக்கு வழி இல்லாத நிலை உள்ளது. இந்த நிலையில் பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு வீரமணி அவர்களின் மேலான கவனத்திற்காகச் சிலவற்றைக் கூற விரும்புகிறோம்.

1. இந்தியாவில் தமிழகத்திற்கப்பால் உள்ள மாநிலங்களில் மொழிச் சிறுபான்மையராக வாழும் தமிழர்களுக்கு ஏற்படும் சிக்கல்களைக் கண்டறித்து அவற்றுக்கான தீர்வுகளை அந்தந்த மாநில நிர்வாகத்தினருடன் கலந்து பேசித் தீர்வு காண முன்வர வேண்டும். குறிப்பாக அண்டை மாநிலமான கருநாடகத்தில் பிற மாநிலங்களைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் தமிழர்கள் வாழ்வதால் அவர்களுக்குள்ள உரிமைகளைப் பெற்றுத் தர தமிழக அரசு உதவிட வேண்டும்.

2. பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் நடத்திவரும் தமிழ்வழிப் பள்ளிக்குத் தமிழக அரசு உதவிட வேண்டும். அதற்காகத் தமிழக அரசில் ஒரு துறை உருவாக்கப்பட வேண்டும். அந்தத் துறைக்கென ஓர் அமைச்சர் பொறுப்பேற்க வேண்டும் என்பதனைத் தாழ்மையான வேண்டுகோளாக முன் வைக்கின்றோம்.

3. கருநாடகப் பல்கலைக் கழகங்களில், குறிப்பாக, பெங்களூரு பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை உருவாகத் தமிழக அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தமிழக அரசு பல்கலைக் கழகத்துடன் கலந்து பேசி அதற்கான நிதி உதவிக்கு ஏற்பபடு செய்திட வேண்டும் என்னும் வேண்டுகோளையும் முன்வைக்கின்றோம்.

4. பிற மாநிலங்களில் சிறப்பாக இயங்கிவரும் பதிவு பெற்ற தமிழ்ச் சங்கங்கள் பல்வேறு சூழல்களில் தமிழ்ப்பணி ஆற்றிவருகின்றன. அவற்றின் வளர்ச்சிக்காக ஆண்டு தோறும் தமிழக அரசு நல்கைகளை வழங்கி உதவிட வேண்டும்.

5. அது போன்றே பிற மாநிலச் சங்கங்கள் நடத்திவரும் நூலகங்களுக்கும் ஆண்டு நல்கை அளித்து உதவிட வேண்டும்

6. பிற மாநிலங்களில் தமிழ்க் கல்வியை ஊக்குவித்திட ஆவன செய்திட வேண்டும்.

7. தமிழ்க் கல்விக்கு வாய்ப்பில்லாதபோது சொந்த முயற்சியில் தமிழைக் கற்பித்துவரும் சங்கங்களுக்குத் தேவையான பாடத்திட்டதையும் வேண்டிய பாட

நூல்களையும் குறுந்தகடுகளையும் வழங்கி, அதற்கான உதவித் தொகையும் தமிழக அரசு வழங்பிட வேண்டும். அத்துடன் அவ்வாறு தமிழ்க்கல்வி பெறுவோர்க்குத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை சான்றிதழ்களையும் வழங்கிட வேண்டும். இந்தப் பொறுப்பைத் தமிழ் வளர்ச்சித் துறையோ, உலகத் தமிழ் அராய்ச்சி நிறுவனமோ ஏற்று நடத்தினால் சிறப்பாக அமையும் என்பது எங்கள் எண்ணம்.

8. பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் போன்ற பதிவு பெற்ற பெரிய அமைப்புகள் ஆண்டுதோறும், தமிழ் இலக்கிய மாநாடு இரண்டு அல்லது மூன்று நாட்கள் நடத்தி தமிழ் நாட்டில் இருந்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், தமிழ் அறிஞர்களையும் அழைத்து இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் சுவைத்திட தமிழ் மக்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திட வேண்டும். தமிழ் நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறை வழியாக இதற்குத் துணை நின்று விழாச் செலவுகளை ஏற்க வேண்டும்.

9. பிற மாநிலங்களில் செயல்படும் தமிழ் அமைப்புகள் ஆண்டுதோறும் அம் மாநில மொழிகளில் சிறந்த தமிழ் இலக்கிய நூல் ஒன்றை மொழி பெயர்த்து வெளியிட தமிழ் நாடு அரசு துணை புரிய வேண்டும்.

10. பல்வேறு மாநிலங்களில் சிறப்பாக இயங்கி வந்தாலும் பல சங்கங்களுக்குச் சொந்த இடம் இல்லை. அந்தச் சங்கங்களுக்கு அவற்றின் செயல்பாடுகளை ஆய்ந்து, கட்டிட நிதியைத் தமிழக அரசு வழங்கினால் அந்தச் சங்கங்கள் மேலும் சிறப்பாகப் பணியாற்றிட வாய்ப்பாக அமையும். நன்றி.

**கோ. தாமோதரன்,** தலைவர்
பெங்களூர்த் தமிழ்ச் சங்கம்.

## பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தில் இணையத்தின் வாயிலாக இல்வசத் திருமணப்பதிவு அறிமுகம்..

பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் பல வருடங்களாக தமிழருக்காகத் திருமணச் சேவைகளையும் மற்றும் திருமணமேடை நேர்காணல் நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறது. இத்தகைய திருமணமேடை நேர்காணல் நிகழ்ச்சிகள் தற்போது **''இமயம் தொலைக் காட்சி''**யில் ஒளி பரப்பப்பட்டு வருகிறது என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

மேலும் சிறப்பு சேர்க்கும் அம்சமாக திருமணப் பதிவுகளை இணையத்தின் வாயிலாக அறிந்து கொள்ள சங்கம் தற்பொழுது தமிழ்ச்சங்கமேட்ரிமோனி.காம் (www. Tamilsangammatrimonial.com) என்கின்ற இணைய தளத்தை அறிமுகப் படுத்தியுள்ளது. தமிழ்ச் சங்கத்தின் இந்தச் சேவையைத் தமிழர்கள் அனைவரும் பயன்படுத்தி, இலவசமாகப் பதிவு செய்து பயன் பெறலாம். மேலும் பல சலுகைகளையும் பெறும் வகையில் இந்த இணையதளம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இணையதளம் கர்நாடக வாழ் தமிழர்கள் மட்டுமல்லாது உலகத் தமிழர்களும் பயன் பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது - **தலைவர்**